**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.13**

**Name : திரு.தணிகாசலம்**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். தறிவேலை செய்கிறேன். விளை கிராம ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன். வெள்ளை மகன் புருஷோத்தமன் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி புருஷோத்தமனின் தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. போன் செய்து காவல்நிலையத்திற்கு வர சொன்னார்கள்.

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும்

தெரியாது. இதற்கு முன்பு என்னை நீதிமன்றத்தில் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அந்த நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையது தான் என்றால் சரி தான். <u>கையொப்பங்கள் அனைத்தும் அ.சா.ஆ.13</u>. நீதித்துறை நடுவர் அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்ததின் அடிப்படையில் தான் கையொப்பங்கள் அனைத்தும் போட்டேன் என்றால் சரி தான்.

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தான் தெரியும் என்றால் காவல்நிலையத்தில் 20ஆம் தேதி என்னை அழைத்தார்கள். நான் சென்றேன். கையொப்பம் போட சொன்னார்கள். போட்டேன். கிராம நிர்வாக அலுவலரிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். அவரும் போட்டார்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நீதித்துறை நடுவர் அவர்களிடமும் நான் வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் வாக்குமூலம் அளித்தேன் என்றாலும், தற்போது ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல்நிலையத்திற்கு மதியம் 1.30 மணி அளவில் சென்றிருப்பேன்

என்றால் சரி தான். நான் போன பிறகு கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்து வரவழைத்தார்கள் என்றால் சரி தான். நான் காவல்நிலையத்திற்கு போகும்போது காவல்நிலையத்தில் ஆஜர் எதிரி, வெள்ளை மற்றும் ரமேஷ் ஆகியோர் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரி தான். நீதித்துறை நடுவர் முன்பு செல்வதற்கு முன்பு போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு தான் போய் சொன்னேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் விடியற்காலை 3.00 மணிக்கெல்லாம் போலிசார் வந்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். நான் காவல்நிலையம் சென்ற பிறகு 1.30 மணிக்கு மேல் போலிசார் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்ததில் கிராம நிர்வாக அலுவலர் 2 மணிக்கு வந்தாரா என்றால் அதற்கு மேல் ஆகிவிட்டது. போன் செய்தவுடன் நான் காவல்நிலையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.